# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS.** 319/2017 r/w OS 140/2018 Plaintiff : PW.2

Deposition of Witness of Defendant: DW

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. சரண்யா | District | : | |
| Father/ Husband name | : | திரு. ராமர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 23.10.2025

**முதல் விசாரணை:**

நான் கண்டாங்கிபட்டி குரூப், கண்டாங்கிப்பட்டி கிராமம், சிவகங்கை தாலுகாவில் கிராம நிர்வாக அலுவலராக தற்போது பணி புரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சத்தியபிரமானத்தின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கேட்க்கப்பட்ட ஆவணத்தை நான் கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். பட்டா எண். 814 யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது முருகையா மனைவி விஜயா பெயரில் உள்ளது. பட்டா எண். 814ல் என்னென்ன சர்வே எண் உள்ளன என்றால் சர்வே எண். 237/6A2A உள்ளது. மேற்படி பட்டா எண். 814 UDRகாலத்தில் மாணிக்கம் என்பவர் பெயரில் பட்டா எண். 584 என "அ" பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கான சர்வே எண். 237/6A2 ஆக விஸ்தீரணம் 1.03.0 ஹெக்டெர்ஸ் என்ற அளவில் இருந்தது. மேற்படி சர்வே எண் சொத்து தான் 1994ம் வருடத்தில் இருந்து பட்டா எண்.814ல் சர்வே எண். 237/6A2Aஆக முருகையா மனைவி விஜயா பெயரில் இருந்து வருகிறது. கடந்த 2016 ம் வருடம் மேற்படி சொத்தானது விஜயா பெயரில் 237/6A2A என்றும், வேனுகோபால் பெயரில் 237/6A2B என உள்ளது.

தற்போதைய வருவாய் துறை ஆவணத்தின் படி மேற்படி சொத்துக்கள் விஜயா மற்றும் வேனுகோபால் ஆகியோர் அனுபவத்தில் இருந்து வருகிறதா என்றால் வருவாய் துறை ஆவணமான பட்டாவில் மேற்படி நபர்கள் பெயரில் உள்ளது புலத்தில் தாவா சொத்தின் அனுபவமானது யாருக்கும் இல்லாமல் வேலி அமைக்கப்பட்டு இரும்பு கேட் போடப்பட்டு மாணிக்கம் என்பவர் பெயர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 1994ம் வருடத்தில் இருந்து வருவாய் துறை ஆவணமான பட்டா அடங்களில் விஜயா என்பவர் அனுபவத்தில் உள்ளதாக தான் அவருடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேற்படி சொத்து யாருடைய அனுபவத்திலும் இல்லை என்பதாக வருவாய் துறை ஆவணத்தில் குறிப்பு இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கான UDR காலத்து 'அ' பதிவேடு, 10(1), தற்போதைய கணினி அ பதிவேடு மற்றும் 10(1), புல படம் ஆகியவற்றின் சான்று நகலை தாக்கல் செய்கிறேன். இது சா.சா.ஆ.1.

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

எங்களுடைய வருவாய் ஆவணத்தின் படி UDR காலத்தில் அ பதிவேட்டில் மாணிக்கம் பெயரில் பாட்டா எண். 584 என தாவா சொத்திற்கு பதிவு இருந்தது என்றால் சரிதான். மேற்படி மாணிக்கம் பெயரில் இருந்து மேற்சொன்ன சொத்திற்கு விஜயா பெயருக்கு என்ன ஆவணத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணத்தில் உத்தரவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டா மாறுதல் பெயரில் மேற்சொன்ன மாணிக்கம் என்பவரின் சம்மதம் பெறப்பட்டுள்ளதா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா இடத்தை நான் நேரில் சென்று பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்தில் RCC கெட்டி கட்டிட வீடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வீடு யார் கட்டியது என்றால் மாணிக்கம் பெயரில் உள்ளது நான் சென்று பார்த்த போது வாட்ச்மேன் மட்டும் இருந்தார் யார் கட்டியது என்று தெரியாது. மேற்படி சொத்தை நான் பார்வையிட்ட சமயம் வீட்டில் மாணிக்கம் மற்றும் அவருடைய மனைவி பெயர் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்ததா என்றால் கல்வெட்டு எதுவும் இல்லை கேட்டில் பி. மாணிக்கம், தமிழ்நாடு காவல் என எழுதப்பட்டிருந்தது எனக்கு நியாபகம் உள்ளது. மேற்படி வீட்டிற்கு அருகே கிணறு ஒன்று இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி கிணறு எந்த சொத்தில் இருந்தது என்றால் வேனுகோபால் பெயரிலான 237/6A2B என்ற சர்வே எண்ணில் இருந்தது. மேற்படி கிணற்றுக்கு அருகே கோனாட்டான் மற்றும் அவருடைய மனைவி பெயரில்

கல்வெட்டு இருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. மேற்படி வீடு, கிணறு அதை சுற்றியுள்ள இடங்களானது மாணிக்கம் என்பவரது அனுபவத்தில் உள்ளது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் மாணிக்கம் என்பவர் மேற்படி சொத்தில் நிரந்தரமாக வசிக்கவில்லை என்றும் அவர் மதுரையில் இருக்கிறார் என்றும் அவ்வப்போது மேற்படி சொத்திற்கு வந்து செல்வார் என்றும் தெரிந்து கொண்டேன். மேற்படி சொத்தானது விஜயா மற்றும் வேனுகோபால் பெயரில் பட்டாவில் தான் உள்ளது என்றும் மேற்படி சொத்தின் தொடர்ச்சியான அனுபவம் மாணிக்கத்திடம் தான் உள்ளது என்றால் இடைப்பட்ட காலத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. விஜயா மற்றும் வேனுகோபால் பெயரில் பட்டா இருந்ததால் அதன் காரணமாக தாவா சொத்து விஜயா அனுபவத்தில் இருப்பதாக சொல்கிறேன் என்றும் அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி கண்டாங்கிபட்டி குரூப்புக்கு எந்த வருடத்தில் இருந்து கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வருகிறேன் என்றால் 2024ம் வருடத்தில் இருந்து பணி புரிந்து வருகிறேன். 2024 க்கு முன்பு தாவா சொத்து குறித்த சமாச்சாரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.10.23 16:56:11 +0530